மேற்காணும் தமிழக அரசின் நடவடிக்கைகளால் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை, எளிய, நடுத்தர மக்களின் கடன் சுமை குறையும் என்பதையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு கிரயப் பத்திரம் கிடைக்க வழிவகுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கூட்டுறவு வீட்டு வசதி சங்கக் கடன் மற்றும் வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடு பெற்றவர்களுக்கான வட்டிச் சலுகை நீட்டிப்பு—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் அட்சயப் பாத்திரமாக விளங்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்கள், அள்ள, அள்ளக் குறையாமல் ஒவ்வொரு நாளும் (மேசையைத் தட்டும் ஒலி) 110–வது விதியின்கீழ் தமிழக மக்களின் விடியலாய் புதிய, புதிய திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய தர வர்க்கம், ஏழை வர்க்கம், தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு கட்டுவதற்காக கடன் பெறுகிற அந்த நிலையிலே, வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றின் பெற்றிருக்கிற கடன்களுக்கு இன்னமும் 6 மாதக் காலம் வட்டிச் சலுகையை அரசு அளித்துள்ளது. ஏற்கெனவே, ஏறக்குறைய 317 கோடி ரூபாய் வட்டிச் சலுகை அவர்களுக்கு சென்றடைந்திருக்கிறது. இனி வருங்காலங்களிலும், அந்த ஏழையெளிய மக்களுக்கு, அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 10 சதவிகிதத்திற்கு மட்டும் அந்தத் தொகையிலே வட்டி கட்டினால் போதும் என்கிற வகையிலே, இனி வருங்காலங்களில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே வட்டிச் சலுகை கிடைக்கிற அளவிற்கு, ஓராயிரம் கோடி ரூபாய்க்கு மேலே—அது எவ்வளவு தொகை என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் தெரியும்—அவ்வளவு தொகையை வட்டிச் சலுகையாக அளிக்கிற வகையிலே வாரி வழங்கியிருக்கிறார்கள்.

2013 *ஏப்ரல்* 22] [*முனைவர் செ.கு. தமிழரசன்]*

முற்பகல் 11–40

*ஒவ்வொரு தனி மனிதனும் அவனுக்காக மட்டும் வாழ்வதில்லை. ஒவ்வொரு தனி மனிதனும் அவன் தெரிந்தோ, தெரியாமலோ அடுத்தவனுக்காகத்தான் வாழ்கிறான். எனவே, சமூகம் என்பது ஒரு கூட்டமைப்பு. ஒரு கூட்டுறவு அமைப்பு என்று சொன்னார் '*social contract *சமூக ஒப்பந்த தத்துவம் தந்த ரூசோ' அவர்கள். அந்த ரூசோவின் எண்ணங்களை அப்படியே செயலாக்குகிற வகையிலே கூட்டுறவுதான் நாட்டுயர்வு, கூட்டுறவு எவ்வளவு வலுப்பெறுகிறதோ (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய அடித்தளம் அமையும் என்கிற வகையிலே கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்துகிற வகையிலே, கூட்டுறவு அமைப்புகளே ஒரு தொய்வு அடைந்து விட்டதோ, தோல்வி அடைந்து விட்டதோ என்று மற்றவர்கள் ஏங்குகிற அந்த நிலைமையைப் போக்கி, கூட்டுறவு அமைப்புகள் வளம் பெறும் வகையிலே, கூட்டுறவு அமைப்புகளின்பேரில் நம்பிக்கையை உருவாக்கும் வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிற இந்த நடவடிக்கைகளை ஏழையெளிய, அடித்தளத்து மக்களின் சார்பிலே வாழ்த்தி, நன்றி பாராட்டி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்றிருந்த நகர்ப்புற, கிராமப்புற ஏழையெளிய மக்கள், இலட்சோப இலட்சம் பேர் வீட்டு வசதி இணையங்களில் கடன் பெற்று அவர்கள் கட்டி வாழ்ந்த வீடுகளுக்கு அவர்கள் தொகையைச் செலுத்த முடியாமலும் பல ஆண்டுகள் வட்டிக்கு மேல் வட்டியாக அந்தத் தொகை மிகப் பெரியதாக இருந்து அவர்கள் அந்தக் கடனில் இருந்து மீள முடியாத சூழ்நிலையிலும் அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கங்கள் கடனில் சிக்குண்டு மீள முடியாத சூழ்நிலையில், அதில் பணியாற்றிய பணியாளர்கள் உட்பட அந்த இயக்கமே செயல்பட முடியாத சூழ்நிலை நிலவியது குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திரு. கருணாநிதியினுடைய அரசில். அதில் பணியாற்றிய பணியாளர்கள் சம்பளமே பெற முடியாத அளவிற்கு முடங்கிக் கிடந்தது அந்த நிலையை மாற்றுவதற்காக, கூட்டுறவு*

இயந்திரம் முழுமையாக, வலிமையாகச் செம்மைப்படுத்தப்பட்டு, நேர்மையாகச் செயல்பட வேண்டும், முடங்கிக் கிடந்த அந்த இயக்கம், வரவேண்டிய கடனை வசூல் செய்வது, வசூல் செய்யப்பட்ட பிறகு அந்த உரிய வீட்டுப் பயனைப் பெற்றவர்கள், வீட்டு உரிமையாளர்களுக்கு உரிய அளவிலே அந்த உரிய ஆவணங்களைத் திருப்பித் தந்து அந்தக் கூட்டுறவு இயக்கங்கள் பலன் பெறுவது என்ற நோக்கத்தை எய்தும் வகையில், சார்ந்து இருந்த, அதில் பயன் பெற்ற மக்கள், வட்டிச் சுமையிலிருந்து முழுமையாக விடுபடுவதற்காக அளித்த வட்டியைத் தள்ளுபடி செய்து, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வது உள்ளிட்ட அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளித் தந்து அந்த ஏழையெளிய சாமானிய மக்களின் நலன்களுக்காக அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட மக்கள் அதில் பெற்றிருக்கின்ற தொகையில் 10 சதவீதம் தொகைக்கு மட்டும் அவர்கள் வட்டி செலுத்தினால் போதும் என்கின்ற அந்தச் சலுகையை அறிவித்து இருக்கின்றார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ரூசோ சுட்டிக் காட்டியதைப்போன்று சமூக ஒருமைப்பாட்டைப்பற்றி, சமூக நல்லிணக்கத்தைப்பற்றி ஓர் அரசு கூட்டாக இணைந்து ஓர் இயக்கத்தை நடத்துகிற நிறுவனமாக சங்கங்களை இணைத்துத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கப்பட்டன. 2,400 ஆண்டுகளுக்கு முன்பு ஏதென்ஸ் நகரத்தில் வாழ்ந்து, கூட்டுறவு, ஜனநாயகம், அரசியல் அறிவியல் குறித்த தந்தை என்று போற்றப்பட்ட சாக்ரடிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற அந்த அரசியல் தத்துவ ஞானிகள் என்று சொல்லப்படுகின்ற அந்த 3 அரசியல் அறிவியலாளர்களின், ஒட்டுமொத்த வடிவமாகத் திகழ்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கடைசி மனிதனுடைய நலன்களுக்காகக்கூட அணு அணுவாய் பகுப்பாய்வு செய்து, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய மீட்சிக்காகவும், அதில் கடன்பட்டோர் மீட்சிக்காகவும் இன்று நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளித் தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அறிவிப்பை வரவேற்று, பாராட்டி, உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி இணையத்தின்கீழ் இயங்குகின்ற நகர வீட்டு வசதி சங்கங்கள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் எல்லாம் கிராமப்புற மக்கள் அனைவருக்குமே வீடு இருக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடும், அதேபோன்று குடிசை மாற்று வாரியம், குடிசைகள் எல்லாம் வீடு ஆக வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடும் உருவாக்கப்பட்டன. அதிலே அவர்களால் வட்டி செலுத்தப்பட முடியவில்லை, அந்தப் பயனாளிகளால் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. சொல்லப்போனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்து அதாவது 2009–லிருந்து அந்தச் சங்கங்கள் வாயிலாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை. அதில் பணிபுரிந்தவர்கள் அனைவருமே உண்மையிலே சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான், அந்த வட்டி விகிதத்தையும் குறைத்து, அபராத வட்டி விகிதத்தையும் குறைத்து அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தை, கடனை திருப்பிச் செலுத்துகின்ற அளவிற்கு, அந்தப் பயனாளிகளே செலுத்துகின்ற அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு முறையும் குறைத்து வந்திருக்கிறார்கள். அதை இன்னும் 6 மாதக் காலத்திற்கு நீட்டித்தும் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் மனமாரப் பாராட்டுகிறோம். அனைவருக்கும் வீடு கிடைக்க வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு அதைத் தொடர்ந்து செய்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எங்கள் அகில இந்திய பார்வர்டு பிளாக் மனதாரப் பாராட்டி வரவேற்கிறது.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறம், கிராமப்புறத்தில் வாழ்கின்ற, கூட்டுறவுச் சங்கம், வீட்டு வசதி சங்கத்தின் சார்பாக கடன் பெற்றவர்களுக்கு பல சலுகைகளை, ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு

[திரு. ஆ. நாராயணன்] [2013 ஏப்ரல் 22

இங்கே மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ரூபாய் 2,136 கோடி கடன் நிலுவை ரூ.1,280 கோடியாக குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள்.

இரண்டாவது, கஷ்டப்பட்ட மக்களுக்கு 75 சதவிகிதம், நடுத்தர மக்களுக்கு 50 சதவிகிதம், உயர் வகுப்பு மக்களுக்கு 25 சதவிகிதம் வட்டித் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொன்னார்கள். கிட்டத்தட்ட 316 கோடி ரூபாய் வட்டிச் சலுகையை இங்கே அறிவித்திருக்கிறார்கள். 1,850 கோடி கடன் வசூல் செய்வதை 6 மாதம் நீட்டித்து இருக்கிறார்கள். அதேமாதிரி கிட்டத்தட்ட 214 சங்கங்களின் உறுப்பினர்களுக்கு கடன் உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். இந்தமாதிரி தினந்தோறும் சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற அம்மா அவர்கள் நாட்டிலே பொருளாதாரத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரம் என்று சொன்னால், வசதி படைத்தவர்களுக்கு, வியாபாரம் செய்கிறவர்களுக்கு வசதிகள் வரும். அதேபோல, அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்கள் பொருளாதாரத்திலே வளமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம், 55 ரூபாய் விற்கின்ற அரிசியை 20 ரூபாய்க்கு, அதாவது, ஒரு கிலோவிற்கு 35 ரூபாய் குறைத்து வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால் ஒரு கிலோ அரிசி வாங்குகிறவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறார்கள். இரண்டு கிலோ அரிசி வாங்கினால் இரண்டாயிரம் ரூபாய், ஐந்து கிலோ அரிசி வாங்குகிறவர்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபாய் அளவுக்கு பொருளாதாரத்தை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் பொருளாதாரத்தை உயர்த்தி வழங்கிக்கொண்டிருக்கின்ற ஒரு சலுகையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், பால் ஊட்டும் அன்பிலே அன்னை நீயே! பழகும் முறையிலே பிள்ளை நீயே! கருணை மனதிலே கங்கை நீயே! கல்லாருக்கும், கற்றோருக்கும் தெய்வம் நீயே! (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தலைவர் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின்மூலம் கடன் பெற்றவர்கள், கடந்த காலங்களிலே பணத்தைத் திரும்பச் செலுத்துவார்கள். உதாரணத்திற்கு 50 ஆயிரம் ரூபாயை எடுத்துச்சென்று செலுத்துகிறார்கள் என்று சொன்னால் அங்கே கூட்டு வட்டி, தொடர் வட்டி, அபராத வட்டி எல்லாம் கழிக்கப்பட்டு கடைசியிலே அவருடைய அசலிலே வரவு வைப்பது ரூபாய் ஆறாயிரமோ, எட்டாயிரமோ, பத்தாயிரமோ என்று இப்படித்தான் இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு வட்டிச் சலுகைகளை அறிவிக்கப்பட்ட இந்தச் சிறப்புத் திட்டத்தின் காரணமாக, கடன் வசூல் என்பது 2 சதவிகிதத்திலிருந்து 32 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் மனமார வரவேற்றுப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, மேலும் 6 மாதக் காலத்திற்கு இந்தச் சலுகை தொடரும் என்பதையும் இங்கே அறிவித்திருக்கிறார்கள், அதற்காகவும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமாரப் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகப் பெற்ற அந்த வீடுகளுக்கும் அந்தச் சலுகைகள் 6 மாதக் காலம் நீட்டிப்பதன் காரணமாக அவர்களின் கடனும் குறைக்கப்பட்டு, அவர்கள் கிரயப் பத்திரங்களும் பெறப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கித் தந்து நல்ல சிறப்பான ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். இதை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் மனமார வரவேற்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறையில் ஒரு பெரிய சீர்திருத்தத்தை கொண்டுவரும் வகையில் 1–9–2009–க்குப் பிறகு கடன் நிலுவை என்பதை ரூ.1,280 கோடியாகக் குறைத்து சிறப்பான வட்டித் தள்ளுபடித் திட்டங்களை அமல்படுத்தி நடுத்தர, மேல்தட்டு, கீழ்த்தட்டு மக்கள் அனைவருக்கும் வட்டித் தள்ளுபடி, அபராத வட்டித் தள்ளுபடி என்று சிறப்பான தள்ளுபடிகளை வழங்கி,*

கிட்டத்தட்ட 317.06 கோடி வட்டிச் சலுகைகள் கூட்டுறவு மற்றும் வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக வழங்குவதன் மூலமாக கடன் வசூல் என்பது 32 சதவிகிதமாக உயர்த்திக் காட்டி அதன்பின்னர், 31–3–2013–க்குப் பிறகும் இந்தத் தவணை தவறிய உறுப்பினர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.1,850.50 கோடி வசூலிக்க வேண்டியிருப்பதால் இந்தக் கடன் வட்டி வசூல் சலுகைத் திட்டங்களை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்து, விரைவில் இந்தக் கடனையும் மேலும் தொடர்ந்து வழங்குவதற்கு வழிவகை செய்தும் பல்வேறு சலுகைகளை வழங்கி 6,730 ஒதுக்கீட்டார்களுக்கு இந்தத் திட்டத்தை நீட்டித்து வழங்கி கூட்டுறவு மற்றும் வீட்டு வசதித் துறையின் மூலமாக வட்டிச் சலுகைகள் திட்டமும், கடன் வசதித் திட்டங்களும் சிறப்பாக அறிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ** அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விஜயதரணி, பாராட்டுவதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமை அன்று நான் அவையில் இல்லை. மரியாதைக்குரிய நமது முதல்வர் அவர்கள், வறட்சி நிவாரணமாக தென்னை விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்பை இங்கே அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக தஞ்சை மாவட்ட தென்னை விவசாயிகளின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியினையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மேலும், தென்னை விவசாயிகளுடைய நலன் காக்க வேண்டுமென்று என்னுடைய அன்பான கோரிக்கையை வைத்து அமர்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி வைத்த அந்தக் கோரிக்கை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களால், பேரவை விதி 110—ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள அந்த அறிவிப்புகளை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று, நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் சிறப்பாக செயலாற்றிட வட்டிச் சலுகை மற்றும் கால நீட்டிப்பு செய்தும், கடன் பெற்ற ஆயிரக்கணக்கான பயனாளிகள் கிரயப் பத்திரம் பெற வழிவகை காணுகின்ற வகையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்பின்மூலம் ஆயிரக்கணக்கான பயனாளிகள் பயன் பெற ஏதுவாக இருக்கும். அந்த வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மேம்பட வழிவகுக்கின்ற அந்த அறிவிப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று, மேலும், கடந்த பல ஆண்டுகளாக இந்தச் சங்கங்களால் புதிய உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கப்படாமல் இருந்த அந்த நிலையை மாற்றுகின்ற வகையில், இன்றைக்கு அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்பின்மூலம் புதிய உறுப்பினர்களுக்கும் கடன்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கின்ற நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நன்றி கூறி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 16 ஆம் தேதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வீட்டு வசதி வாரியத்தில் கடன் பெற்ற பயனாளிகள் தள்ளுபடி காலத்தை நீட்டித்து தரவேண்டுமென்று கோரிக்கை வைத்து அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கூறினார்கள். நான் என்னுடைய பதிலுரையில் அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனையில் உள்ளது என்று கூறினேன். விண்ணப்பம் வைப்பதற்கு முன்னே, விடை கொடுக்கின்ற தாயாக விளங்குகின்றவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு வீட்டு வசதிக் சங்கங்கள் மூலமாக நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் ஏழை எளியவர்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் நிறைய பேர் கடன் பெற்றார்கள்.

அவர்களுடைய ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில் அவர்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையிலும், அதேபோல், வீட்டு வசதி வாரியத்தில் கடன் பெற்றவர்களுக்கு இறுதி விலையில் வருடத்திற்கு 5 மாதத்திற்கு வட்டி தள்ளுபடியும் இன்றைக்கு அவர்களுக்கு மேலும் ஆறு மாதக் காலம் நீட்டிப்புத் தந்து வீட்டு வசதித் துறையும், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமும் வலிமை பெறவும் கடன் பெற்றவர்கள் வளம் பெறவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உதவியிருக்கின்றார்கள். எனது துறையின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனிதன் பாதுகாப்பாக வாழ்ந்திடவும், சமுதாயத்தின் அங்கமாக நிலைப் பெறவும், வீட்டு வசதி என்பது மிகவும் அவசியமாகிறது. மனித சமுதாயத்தின் அவசியத் தேவைகளில் ஒன்றான உறைவிட வசதியைத் தமிழக மக்களுக்கு ஏற்படுத்தித் தரும் மகத்தான சேவையில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1912–லிருந்தே செயல்பட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே புத்துயிர் பெறுகின்றன. காக்கையும், குருவியும்கூட சொந்தக் கூட்டில் வாழ்கின்றன. சொந்த வீடு கட்ட நினைக்கும் மக்கள் கடன் வாங்கி வீடு கட்டுகின்றனர்.

முற்பகல் 11–55

‘வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்’ என்பார்கள். கடனுக்கான வட்டி, அபராத வட்டி பயமுறுத்தி வீடு கட்டியவருடைய வாழ்க்கையை தளர வைக்கிறது. இன்றைக்கு ஏப்ரல் 22 ஆம் தேதி, International Mother Earth Day. சர்வதேச பூமி தினம். சொந்த வீடு போல நினைத்து, அன்னை பூமியைக் காக்க வேண்டியதை வலியுறுத்தும் நாள். (மேசையைத் தட்டும் ஒலி) வீடு மட்டுமல்ல, என் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள உள்ளங்களும் துயரத்திலிருந்து விடுபட்டு, மகிழ்ச்சியடைய, வேதனைகளைத் தீர்த்துவைப்பவர், விழி நீரைத் துடைத்து வைப்பவர், மகிழ்ச்சிக்குத் துணையாக நிற்பவர், இந்த பூமியைச் சுற்றும் சூழலையும் தன் வீடுபோல பாவித்ததோடு, அதிலுள்ள மக்களுக்கு வட்டிச் சுமையால் துயரடையாது, மகிழும் முறையில் சிறப்புற அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு உறுப்பினர்களுடைய நன்றியோடு, என்னுடைய நன்றியையும் தெரிவிக்க விழைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)